


பாண்டிருப்பு, கல்முனையைப் பிறப்பிடமாகவும்
104, இராஜவரோதயம் வீதி, திருக்கோணமலையை வசிப்பிடமாகவும் கொண்டமைந்த

# அமரர் சரஸ்வதி கணேசபாலன்

அவர்களின்

## சிவபதப்பேறு குறித்த
## 31ம் நாள் நினைவஞ்சலி மலர்

**01.06.2014 ஞாயிற்றுக்கிழமை.**

**ஜெய ஆண்டு வைகாசித்திங்கள் 18ம் நாள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்

# அமரர் சரஸ்வதி கணேசபாலன்

# (அன்னபூசணி)

**மலர்வு**
**1933.06.26**

**உதிர்வு**
**2014.05.02**

## மறைவுதினப் பா....

பொங்கு ஜெயவாண்டு புலர்சித் திரைத்திங்கள்
தங்கும் பூர்வபக்கச் சதுர்த்தியே - எங்கள்
சரஸ்வதி கணேசபாலன் சகமிதன் வாழ்வுகுத்து
இறைபதம் அடைநாளெ ன்றியம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

### திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

### தேவாரம்

மனம் எனும் தோணி பற்றி மதி எனும் கோலை ஊன்றிச்
சினம் எனும் சரக்கை ஏற்றிச் செறிகடல் ஓடும் போது
மனன் எனும் பாறை தாக்கி மறியும் போ(து) அறிய ஒண்ணா(து)
உனை உனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடைய கோவே

### திருவாசகம்

வேண்டத் தக்க(து) அறிவோய் நீ
வேண்ட முழுவதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்(கு) அரியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யா(து) அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரி சொன்(று) உண்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே!
வேறணி புவனபோகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா!
ஆறணி சடை எம் அற்புதக் கூத்தா!
அம்பொன் செய் அம்பலத்தரசே!
ஏறணி கொடி எம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா(று) இசையே!

## திருப்பல்லாண்டு

குழல் ஒலி யாழ் ஒலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண் அறவும் சென்று
விம்மி மிகு திரு ஆரூரின்
மழவிடை ஆற்கு வழி வழி
ஆறாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழ அடியாரொடும் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெரும் கூத்தின்
வந்த பேரின்ப வெற்றத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

துள்ளுமத வேட்கைக் கணையாலே
தொல்லை நெடு நீலக் கடலாலே
மெள்ள வரும் சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தருவாயே
தெள்ளு தமிழ்ப் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசத் திறலோனே
வள்ளல் தொழும் ஞானக் கழலோனே
வள்ளிமண வாளப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவிழைப் பா

உலகமும் தோற்றமும் ஆனவளே தாயே
உயிர்களும் இயக்கமும் ஆனவளும் நீயே
அலகிலாச் சோதியாய் ஆனவளே தாயே
அரனவன் திருச்சக்தி ஆனவளும் நீயே
கலைகளும் காட்சியும் ஆனவளே தாயே
கருணைப் பெருங்கடல் ஆனவளும் நீயே
நிலையிலாப் புவியினில் தாயாக நீயே
நெருக்கமா யமர்ந்தருள் புரிகின்றாயே

வேதத்தின் உட்பொருளே விரிந்தெழு அண்டத்தின்
வித்தாகி நிற்பவளே வெளியெங்கும் நிறைந்தவளே
நாதத்தின் இருப்பிடமே நவசக்தியாகி நின்று
நானிலத்தோர் வாழ்வில் நடைமுறையாய் ஆனவளே
ஓதற் கரியவளே உள்ளொளியே பெருநிதியே
உயிர்மூச்சா யாகிநின் றருள்பவளே தாயே
ஏதமில் அன்னையே இன்னுயிரே பத்ரகாளி
எனும்நாமம் பூண்டமர்ந்த இணையிலாச் சக்தியே

எங்கள்மண் தலைநிமிர இன்னருள் புரிபவளே
எம்துயர் போயொழியச் சக்தியாய் வருபவளே
பொங்கிவரும் பகையோட்டும் உருத்திர நாயகியே
பொருளுக்கும் அறிவுக்கும் பிறப்பிடமாய் ஆனவளே
சங்கரனாஉ மனங்கொண்ட சக்தி ஓங்காரியே
சந்தோஷம் சன்மாஉக்கம் தந்தெம்மை ஆள்பவளே
தங்கத்திருக் கோணமலை மண்ணமஉந்து காக்கும்
தாயேபத்ர காளியெமக் கெல்லாமும் நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வெண்புறாவின் வருகை...

வெண்புறா ஒன்று உலகுக்கு வர ஆசைப்பட்டது.

பிரமன் அனுமதித்தார் : புறா வந்தது.

பூமண்டலம் மகிழ்ந்து துள்ளியது.

அந்த நாள் **26 ஜூன் 1933** எனக் கணிக்கப்பட்டிருந்தது.

புறாவின் பெற்றோராக வாய்த்தவர்கள் **துரையப்பா இராசம்மா** தம்பதியினர் : அவர் தம் வாழிடம் **பாண்டிருப்பு.**

துரையப்பா **கல்முனையில் பொலிஸ் விதானையாராகப்** பணிபுரிந்து கொண்டிருந்தார்.

அவர்கள் செய்த தவப்பயனின் முதற்பேறாக புறா அவர்களூடாக உலகத்தை அடைந்தது.

இல்லறத்தின் முதற்பேறல்லவா அது.

மகிழ்ச்சியால் துள்ளினார் துரையப்பா.

மனைவியைப் பார்த்தார். என்ன பெயர் வைக்கலாம் என்று கேட்டார்.

தங்கள் வம்ச வழிபாட்டுத் தெய்வம் திரௌபதியே வந்திருந்தாற்போற் பிறந்த பெண்ணுக்கு கல்வியும் கலையும் சேர்ந்த **சரஸ்வதி**யின் பெயரைச் சூட்டினர்.

சரஸ்வதியை **அன்னபூசணி** என்றும் ஆனந்தம் பொங்க அழைத்தனர்.

அன்னபூசணியின் பின் வரவுகள் **கோபாலகிருக்ஷ்ணன், இராமகிருக்ஷ்ணன், ஜீவரெத்தினம், லீலாவதி, முத்துக்கிருக்ஷ்ணன்** என ஐவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று பெண்கள் - மூன்று ஆண்கள் எனக் குடும்பம் ஆனந்தமயமானது.

வெண்புறா சிறகடிக்கத் தொடங்கியது. கூட்டுக்குள் தன் பின்வரவுகளாக அமைந்த தம்பியரையும் தங்கையரையும் அணைத்து மகிழ்ந்தது.

துள்ளித்திரியும் பருவம். பள்ளிக்கு விட்டனர் பெற்றோர். **கல்முனை கார்மேல் கான்வென்ட்** மாணவியானார் சரஸ்வதி.

உடன்பிறப்புகளுடன் உறவாடி, தோழியர்களுடன் விளையாடி, உற்றார் சொந்தங்கள் போற்ற பருவமடைந்தார் சரஸ்வதி.

பெற்றோர் மகிழ்ந்தனர். உற்றோர் வியந்தனர். அழகும் குணமும் ஒருங்கே அமையப்பெற்ற பெண்ணல்லவா அந்த வெண்புறா.

வெண்புறாவுக்கு விவாகப் பருவம். பெற்றோர் வரன் பார்த்தனர். உற்றோர் உதவி நின்றனர். நாள் குறிக்கப்பட்டது.

**திருக்கோணமலை சுப்பிரமணியம் இராசநாச்சியார்** தம்பதியின் புதல்வர் **கணேசபாலன்** மணமகனானார்.

1959 புரட்டாதி மாதத்தின் ஒரு நன்நாள் மணநாளானது.

**இலங்கை மின்சாரசபையில்** பணிபுரிந்த கணேசபாலனும், பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதி அம்மனின் மனம்பதிந்த சரஸ்வதியும் கைகோத்தனர்.

பெற்றோர் பெரியோர் வாழ்த்துகளுடன், உற்றோர் உறவோர் ஆதரவுடன் மணவிழா இடம்பெற்றது.

இல்லறத்தில் இனிமை : இதயத்தில் செழுமை : வெண்புறா தாயானது.

**பிரேமதா, பிரேம்ஆனந்த், பிரேம்குமார், பிரேம்சுதாகர், ஜெகநாதன், பிரேம்ஆனந்தி....** ஆறு செல்வங்கள் வெண்புறாவின் சிறகுகளுக்குள் அடைக்கலமாயின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவில் இல்லறவாழ்வில் இடி வீழ்ந்தது. **கணேசபாலன் காலமானர்.**

இது நிகழ்ந்த தினம் - வெண்புறாவின் வாழ்க்கை இருண்ட தினம் 1971 டிசம்பர் 15.

மனந்தளரவில்லை : பிள்ளைகளுக்காக வாழ்ந்தது வெண்புறா.

பிள்ளைகளுக்கு பாசத்தை ஊட்டியது : பரிவை ஊட்டியது : கல்வியை ஊட்டியது : கண்ணியம் கடமை என்பவற்றைக் கட்டுப்பாட்டுடன் கலந்தூட்டியது.

தந்தை இல்லையே என்ற குறை பிள்ளைகளை வருத்தக்கூடாது என்பதற்காக, தன்னாலான முயற்சிகளை எடுத்தது.

பிள்ளைகள் வளர்ந்தனர் பெரியவர்களாயினர்.

மூத்தமகள் பிரேமலதாவுக்கு **பொலிகண்டியைச்** சேர்ந்த **இராசலிங்கம்** என்பவரை மணமகனாகத் தேர்ந்தெடுத்து ஒப்படைத்தது அந்தப்புறா. **இராசலிங்கம் ஜெகன் ஸ்டோர்ஸ்** உரிமையாளராக இருக்கிறார்.

இவர்களின் இல்லறப்பயனாக **ஜெயகாந்த், ஜெயந்தினியை** பேரப்பிள்ளைகளாகப் பெற்றுக்கொண்ட போது உச்சிக்குளிர்ந்தது வெண்புறாவுக்கு.

மகன் பிரேம்ஆனந்த் (Global Prepaid card Center) இன் உரிமையாளர் **சுவிஸ்** நாட்டின் அணங்கு **எரிக்காவை** தனதாக்கிக் கொண்டதால், **சிமேயா, யாயல், யமீனா, நயோமி, ஜெரோம்** என ஐவர் பேரர்களாகி வெண்புறாவின் மகிழ்ச்சிக்கு விருந்தளித்தனர்.

பிரேம்குமார், **ஹரி எலக்ரோனிக்ஸ்** உரிமையாளர், **திருக்கோணமலையில்** மாமி மகளான **சுபோதினியைக்** கரம்பற்றினார். **ஹரிபிரசாத், திவ்யப்பிரசாந்தி, சர்வப்பிரசாந்தி** என மூன்று குழந்தைகள் இவர்கள் வழியில் சரஸ்வதி அம்மையாரைச் சூழ்ந்துகொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேம்சுதாகருக்கு **கந்தளாயைச** சேர்ந்த **இந்திராதேவி** துணையானார். **விதுக்ஷன், நிதுக்ஷன், நிக்ஷா** என மூவர் பேரர்களாயினர்.

**ஜெகநாதன் - பாண்டிருப்பு ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார், ஸ்ரீதிரௌபதி அம்மன் ஆலய வண்ணக்கர், தம்பிலுவில்** தந்த ஆசிரியை **ஜெயரஞ்சினியை** மணங்கொண்டார். அவர்தம்வழிப் பேரனாக **சுய்ஹர்சன்.**

**1989 மார்கழி 30**ம் நாள் கடைசிமகள் பிரேம்ஆனந்தியை இறைவன் அணைத்துக் கொண்டபோது துடித்துப்போனது அந்த வெண்புறா.
அன்புத்தங்கை லீலாவதி வாழ்க்கைப் பயணத்தை முடித்துக்கொண்டபோது கலங்கிப்போனது அது. மெல்லமெல்லப் பேரப்பிள்ளைகளின் முகம்பார்த்துக் கவலையை மறக்கத் தொடங்கியது.

பதினான்கு பேரக்குழந்தைகளல்லவா? யாருக்குக்கிடைக்கும் இந்தப்பேறு?

மக்கள் மருமக்களின் இனிய உறவால் உள்ளம் பூரித்துப் போயிருந்தது.

முதற்பேரன் **ஜெயகாந்தனுக்கு ஆசிரியப்பணி** கிடைத்தபோது அகமகிழ்ந்து வாழ்த்தியது.

மைத்துணிகளான **பத்மாவதி, சத்தியவதி** ஆகியோரின் பிரிவும், மைத்துணர் **மயில்வாகனத்தின்** பிரிவும் வெண்புறாவின் மனதை வெதும்பவைத்தன.

மைத்துணர்களான **சங்கரதாஸ், ரெட்ணசபா,** மைத்துணிகளான **ரமணி, ஆனந்தபாஸ்கரி, அருந்தவநாயகி** ஆகியோரை அன்புடன் அரவணைத்து மகிழ்ந்தது. உடன்பிறப்புகளையும் உயிரென மதித்தது.

இந்த மகிழ்ச்சியோடு பிறந்தஊரில் வாழும் மகிழ்ச்சியும் சேர்ந்தால் எப்படி இருக்கும்? வெண்புறா விரைந்தது பிறந்தகத்துக்கு.

மகன் ஜெகநாதனுடன் பாண்டிருப்பில் தனது முதுமையை சந்தோஷத்துடன் கழித்தது. சரஸ்வதியாக... அன்னபூசணியாக.... தனது கடமைகளை ஆற்றியநிறைவு வெண்புறாவுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர் தொடர்ந்தும் இங்கிருந்தால் வருபவர்க்கு இடமேது? சொந்தங்கள் சூழ்ந்திருந்தாலும் சொர்க்கம்போல் வாழ்விருந்தாலும் வாழ்வுக்கு ஓர் எல்லையுண்டுதானே.

பிறக்கின்றபோதே இறக்கின்றசேதி இருக்கின்றதென்பது மெய்தானே என இதைத்தானே கவிஞர் பாவிவைத்தார்.

அந்த சேதிக்கான தேதி வந்தது. உடல்நலம் குன்றியது. உள்ளம் இறைபதத்தை நாடியது.
மக்கள் மருமக்கள், பேரப்பிள்ளைகள், உடன்பிறப்புக்கள், மைத்துணர்மார், மைத்துணிமார் எனப்பெருந்திரளான உறவுகளின் கண்ணீரையும் கருத்திற்கொள்ளாது அந்த வெண்புறா விழிகளை மூடிக்கொண்டது.

அந்தப்பொழுதை **மே 02 2014 பிற்பகல் 4.15** எனக் குறித்துக்கொண்டது உலகம்.

**ஜெயவாண்டு சித்திரை 19 வெள்ளிக்கிழமை** எனப் பகன்றது பஞ்சாங்கம்.

எவர் எதனைக் கணக்கிட்டாலும் மூடிய விழிகள் திறக்கப்போவதில்லை. உதிர்ந்த சருகுகள் இலைகளாவதில்லை. இதுதான் உலக வாழ்க்கை.

வெண்புறாவின் ஆத்மசாந்திக்காக எல்லோரும் பிரார்த்திப்போம்.

**ஓம் சாந்தி..... சாந்தி..... சாந்தி.....**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் துயரம்

பாசமுடன் பாலூட்டி வளர்த்த அம்மா
பகலிரவாய்க் கண்விழித்துக் காத்த அம்மா
நேசமுடன் எமையணைத்து மகிழ்ந்த அம்மா
நினைவெல்லாம் எமதுயர்வைக் கொண்ட அம்மா
பேசரிய பொக்கிஷமாய் வாழ்ந்த அம்மா
பேசுகின்ற தெய்வமென நின்ற அம்மா
நாசரிய வெம்பியமும் எமைநீ விட்டு
நாதனடி சேர்ந்தனையே அம்மா அம்மா...

உன்றனுயிர் எம்முயிரிற் கலந்தே வாழும்
உன்றனெண்ணம் எங்கள்நெஞ்சை என்றும் ஆளும்
உன்றன்திரு முகமெங்கள் விழியில் அமரும்
உன்றனறி வுரையாலெம் வளமும் பெருகும்
என்றும்உன் உளம்நோகா திருப்போம் அம்மா
உன்பேரால் உலகிலென்றும் சிறப்போம் அம்மா
அன்றலர்ந்த மலர்களென நாங்கள் மணக்க
அருகிலிருந்து ஆசிதர வேண்டும் அம்மா...





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் துயரம்

அன்பைச் சொரிந்த மாமி
அணைத் தெம்மைக் காத்த மாமி
தன் பிள்ளையா யெம்மைத்
தலை நிமிர்த்திப் பார்த்த மாமி
துன்பம் நெருங்க விடாத்
தூயமனம் கொண்ட மாமி
என்ன நினைத் தீரோ
எமைத் தவிக்க விட்டீரே!

நிழல்தரு மரமாய் நின்று
நீங்கள் காத்து வளர்த்த நாங்கள்
அழன் மேல் துடிக்கின்றோம்
அகன்ற தேனோ எம்மை விட்டு
மழலையாய் எங்கள் மனம்
மயங்கித் தான் வேகு தம்மா
உலகினில் மாமி யென்றால்
உனக்கு நிகர் நீயே யம்மா!

## பேரப்பிள்ளைகள் துயரம்

ஓடிவந்து நாமுறங்கும் மடியையின்று காணோம்பாட்டி
தேடியெம்மைத் தூக்கித்தழுவும் கைகளெங்கே கூறுபாட்டி
நாடித்தெய்வப் பதம்சேர்ந்தாய் எமைநினைக்க மறந்தாய்பாட்டி
கோடியுறவு இருந்தபோதும் உனைப்போன்று வருமோ பாட்டி?





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர் துயரம்

பாசவிளக்கே பைந்தமிழே பெட்டகமே
நேசஉருவே நினைவெல்லாம் நிறைந்தவளே
ஆசைச் சகோதரியே அன்பேஎம் ஆரமுதே
மோசஞ் செய்தனையே மனங்கதறித் துடிக்குதடி...

## மைத்துனர் மைத்துனிமார் துயரம்

முகமலர்ந்து விருந்தோம்பி முன்னின்று சபைநடத்தி
அகமகிழ வார்த்தையாடி அனைவரையும் கவர்ந்தனையே
செகமதிலே நாம்தவிக்க செம்பொன்னே எங்குசென்றாய்
அகமெல்லாம் அழுகிறதே ஆறுதல்தான் கூறாயோ..

## உறவினர் துயரம்

வந்தாரை வரவேற்கும் பண்புறங்கிப் போனதம்மா
நொந்தார்க்கு உதவிசெயும் நல்லமனம் சோர்ந்தம்மா
செந்தா மரைத்தாயாய் சூழுறவு பேணிவந்த
நந்தா விளக்கொன்று நாதனடி சென்றதம்மா...

## தேற்றப்பா

கறந்தபால் முலையேறா காய்ந்தமலர் செடியேறா
இறந்தவுடல் மீண்டெழுந்து நடமாடா – மறந்திங்கு
அழுதரற்றி ஆவதென்ன அவரவர்தம் கடமைதனைப்
பழுதின்றி ஆற்றுதலே மேல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ அபரக்கிரியை

அபரம் என்பது பிந்திய எனப்பொருள்படும். உடலில் இருந்து உயிர் பிரிந்த பின்பு செய்யும் கிரியை ஆதலால் இது அபரக்கிரியை என்று பெயர் பெறுகிறது. அபரக்கிரியை உத்திராந்திக் கிரியை முதல் வருட சிராத்தம் வரை பல கிரியைகளை உடையனவாம். இங்கே கூறப்படும் கிரியைகள் யாவும் சமயதீட்சை பெற்றவர்களுக்கு மட்டுமே செய்யப்படுவதாகும். சமயதீட்சை இல்லாதவர்கட்கு மந்திரமில்லாது, திருமுறையுடன் கிரியை செய்ய வேண்டும். ஆதலால் எல்லோரும் சமயதீட்சை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

## உக்கிராந்திக் கிரியை

ஒருவர் உயிர் பிரியும் நிலை அடையும் போது (மரண வேளை) சுற்றத்தவரிடத்தும், பொருள் இடத்தும் உள்ள பற்றை நீக்கி, விபூதி பூசிச் சிவபெருமானைத் தியானித்து தேவாரம், திருவாசகங்களைச் சிவனடியவரைக் கொண்டு பாடக் கேட்க வேண்டும். இவ்வேளை (பசு) கோதானம் செய்வது சிறந்ததாகும்.

அவருடைய மகன் அல்லது சுற்றத்தவருள்ளே சமயதீட்சை உடையவன் மனம் கலங்காது புண்ணியதலத்து விபூதி பூசி அவர் உடம்பில் வில்வத்தடி மண்பூசி, அவர் வாயில் கங்காதீர்த்தம் விட்டு அவர் தலையைத் தம்மடி மீது வைத்து அவர் செவியில் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை உபதேசித்து செவியைக் கையினால் மூடவேண்டும. உயிர் நீங்கிய பின் உடலைச் சுத்தி செய்து அலங்காரம் செய்து நிலத்தைத் தூய்மைப்படுத்தித் தர்ப்பை பரப்பி தெற்கே தலை இருக்கத்தக்கவாறு கிடத்தவும். காற்பெருவிரல் இரண்டையும் துணியால் கட்டிவிடவும். இதேபோல் கைப்பெருவிரல் இரண்டையும் சேர்த்துக்கட்டவும். வாயைத் தலையுடன் சேர்த்துக்கட்டிவிடவும். உப்பைப் பொட்டலமாகக் கட்டிப் பிரேதத்தின் மீது வைத்தலும் பிரேதத்திற்குக் கீழே நீர் நிரம்பிய பாத்திரம் வைத்தலும் உண்டு. உடலை வெள்ளைத் துணியால் முழுமையாய் மூடிவிடவும். தலைப்பாகத்தில் குத்துவிளக்கு ஏற்றி வைக்கவும். மனைவி, மக்கள், சுற்றத்தவர் அருகில் இருந்து தேவார திருவாசகங்களை பக்தியுடன் ஓத வேண்டும்.

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களும் தனிஷ்டா பஞ்சமி எனப்படும். இப்பஞ்சமியில் ஒருவர் இறந்தால் இதற்கு தானம், சாந்தி செய்யின் தோஷம் நிவர்த்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூர்ணோற்சவம் வீட்டில் நடைபெறும் கிரியை

இறந்தவர் வீட்டு முற்றத்தில் பந்தல் அமைத்து, வெள்ளை கட்டி, மாவிலை, தோரணம் கட்டல் வேண்டும். இங்கு அமைக்கும் பந்தல் தட்டைப் பந்தலாயும் மேலே வேயப்படும் ஓலை பச்சை ஓலையாயும் இருக்க வேண்டும். வீட்டு வாயிலிலே, மொந்தன் வாழை குலையுடன் கட்டல் வேண்டும். நிலத்தைப் பசுஞ்சாணத்தால் மெழுகி மண்டபத்தை மூன்றாகப் பிரித்து மாக்கோலமிட்டு, மண்டபத்தில் மேற்கே நடுவில் சிவகும்பமும் சூழ எட்டுக் கும்பமும் வைக்கவும். இறந்தவர் சமய தீக்ஷீதராயின் உருத்திர மூர்த்தியையும் விசேட தீக்ஷீதராயின் ஈஸ்வரமூர்த்தியையும், நிர்வாண தீக்ஷீதர் ஆசாரி அபிஷேகம் பெற்றவராயின் சதாசிவ மூர்த்தியை, நடுக்கும்பத்திலும் சூழ உள்ள கும்பங்களில் ஈசானம் முதல் கிழக்கு வரை ஈசானன், குபேரன், வாயு, வருணன், நிருதி, யமன். அக்கினி, இந்திரன் ஆகியோரைப் பூசிக்க வேண்டும். நடுவே அக்கினி காரியத்திற்கெனக் குண்டம் ஒன்று அமைத்து அதற்குக் கிழக்கே உரல் உலக்கையையும் அதற்குக் கிழக்கில் பேரி தாடனத்திற்காகப் பேரியையும் வைக்கவும். உரல் உலக்கை மாவிலை, கூர்ச்சம், கோ, வஸ்திரம் கட்டி மலர்மாலையால் அலங்கரித்து உரலினுள்ளே அறுகும் மஞ்சள் மாவும் இடவும். உரலைச் சூழ நல்லெண்ணெய், அரப்பு, எலுமிச்சம்பழம், அபிஷேகப் பொருட்கள் இறந்தவர் உடலுக்கு அணியும் உடுபுடவை என்பவற்றை வைக்கவும். உரலுக்குப் பக்கத்தே ஒரு கும்பம் வைத்து அதில் பாசுபதாஸ்திர தேவரைப் பூசிக்கும்படி காரணாகமத்தில் உள்ளது. இக்கும்ப சலத்தில் சுண்ணப்பொடியைக் குழைப்பர். குண்டத்திற்கு வடக்கே மண்குண்டத்தில் சுடலைக்குக் கொண்டு செல்லும் உருத்திர கும்பம் அமைத்தல் வேண்டும். ஸ்நபன கும்பத்திற்கு தெற்கே புண்ணியாகவாசன கும்பத்தையும் பஞ்சகௌவியத்தையும் அமைக்கவும்.

## கிரியை செய்வோன்

தந்தைக்கு மூத்த மகன், தாய்க்கு இளைய மகன் கடமை செய்தல் வேண்டும். மகன் இல்லாத போது மனைவி, கணவன், மகள், சகோதரன், அவர், மகன், தந்தை, தாய், மருமகள், சகோதரி, சபிண்டன், சமானோதகன், சீடன், குரு, தோழன், அரசன் ஆகிய இவர்களுக்குள் முன்னவர் இல்லாத இடத்தில் அடுத்தவர் கிரியையெல்லாம். மகன், மனைவி, மகள் தவிர்ந்த ஏனையோர் கிரியை செய்யின் அவர் தந்தை அல்லது தாய்க்கு கடமை செய்தவராய் இருக்க வேண்டும்.

கர்த்தா (கிரியை செய்வோன்) சவரம் செய்து நீராடி கோடி வஸ்திரம் இரண்டு அணிந்து அனுட்டானம் முடித்தல் வேண்டும். குரு கர்த்தாவிற்கு விபூதி கொடுத்தது பவித்திரம் அணியச் செய்து உபவீதம் இடமாக அணிவித்துச் சங்கற்பம் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுவார். விநாயக பூஜை புண்ணியாக வாசனம் முதலிய கிரியைகளைச் செய்து புண்ணியாக பஞ்சகௌவியத்தை மண்டபத்தில் தெளித்து இடத்தை சுத்தி செய்து நெற்பொரிகளை மண்டபத்தில் இறைத்துக் கொள்வர். இங்கு கர்த்தாவிற்குப் பஞ்சகௌவியம் பருகக்கொடுக்கக் கூடாது. கிரியை நடைபெறும் போது திருமுறைப் பாடல்களை ஓதுதல் வேண்டும். குரு அங்க நியாசம், கர நியாசம், சிவோகம் பாவனை செய்து ஸ்நபன கும்பபூசை முடித்து, அக்கினி காரியம் முடித்து பூரணாகுதி கொடுத்து கிரியை பூர்த்தி செய்யப்படும். கர்த்தாவிடம் நெற்பொரி கொடுத்து அதைப் பிரேதத்தின் மீது போட்டுக் கற்பூர தீபங்காட்டிய பின் பிரேதத்தை குளிப்பாட்டுதற்காக வீட்டின் பின்புறம் எடுத்துச் சென்று தலை தெற்காகக் கிடத்தி ஆசௌசிகள் அரப்பு எண்ணெய் வைப்பர். கர்த்தா மேற்கு முகமாக நின்று நல்லெண்ணெய் அரப்பு என்பவற்றை பிரேதத்தின் சிரசில் வைப்பர். பின்பு அரிசிமா, மஞ்சள்மா, பால், தயிர், இளநீர் அபிஷேகம் செய்து பின் பஞ்ச கௌவியம், கும்பநீரால் அபிஷேகம் செய்ய வேண்டும். கர்த்தா இடது கைமேல் வலது கையை வைத்துப் பிடிக்க வேறு ஒருவர் உதவியுடன் கர்த்தாவின் புறங்கையினால் அபிஷேகம் செய்யவேண்டும். பின் அத்தர் பன்னீர் முதலிய வாசனைத் திரவியம் தெளித்து பிரேதத்தை அலங்காரம் செய்து மண்டபத்திற்கு கொண்டு வர வேண்டும். தலை தெற்கில் இருக்கக் கூடிய குருக்களுக்கு இடப்புறமாக வைத்து திருநீற்றை நீரில் குழைத்து சத்தியோசாதம் முதலாக முழந்தாள், தொப்புள், மார்பு, நெற்றி, சிரசு, புயம் இரண்டு, முழங்கை இரண்டு, மணிக்கட்டு இரண்டு, விலா, முதுகு, கழுத்து ஆகிய இடங்களில் உரிய மந்திரத்துடன் பூசி பன்னீரால் கைகழுவி நீரைப் பிரேதத்தின் சிரசில் தெளிக்கவும். இவ்வேளையில் திருநீறுப் பதிகம் ஓதல் வேண்டும். சந்தனம் குங்குமம் திலகமிட்டுச் சாத்தவும்.

## சுண்ணம் இடித்தல்

பேரிதாடனம் செய்து அதன் பின் உரலில் பூமிதேவியையும் உலக்கையில் மேரு மலையையும் பூசித்து (வையகமெல்லாம் உரலாக மாமேருவென்றும் உலக்கை நாட்டி) அறுகு, மஞ்சள்மா என்பவற்றை உரலில் இட்டு என்பத்தொரு பதமந்திரம் சொல்லி மூன்றுதரம் இடித்துப் பின் திருவாசகத்தில் உள்ள திருப்பொற்சுண்ணப்பாடல் பாடி இடித்தல் வேண்டும். பஞ்ச புராணம் பாடி நிறைவு செய்து வெற்றிலையில் சுண்ணப்பொடியை எடுத்து உரலுக்கப் பக்கத்தில் உள்ள கும்பநீர் விட்டு உள்ள கும்பநீர் விட்டுக் குழைத்து கர்த்தா நெற்றியில் (பொட்டிட்டு) நெற்றியில் அணிந்து பிரேதத்தின் இரண்டு கண்களிலும் சாத்தி மிகுதியை உடல் முழுவதும் தெளித்து விடுக. சுண்ணம் இடிக்கும் போது இறந்தவரின் பேரப்பிள்ளைகள் முதலானோர் பிரேதத்தை சூழநின்று பந்தம் பிடிப்பர். சுண்ணம் இடித்தல் பிரேத ஸ்நானத்திற்கு முன் நிகழ்வது தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையானது. நம்மவர்களின் ஆசாரக் குறைவு கருதி பிரேத சுத்தியின் பொருட்டு சிவகும்ப ஸ்நானம் முடித்து அதன்மேல் சுண்ணப்பொடி தெளிக்கப்படுகிறது.

இறந்தவர் நற்கதி அடைய வேண்டித் தானம் கொடுத்தலும், பிரேத யாத்திரையின் பொருட்டு யாத்திரா தானமும் நிறைவு செய்து குருக்களுக்குத் தட்சணை கொடுக்கப்படும்.

மனைவி, மக்கள், சுற்றத்தவர் (பெண்கள்) இப்புறமாகச் சுற்றி வந்து வாய்க்கரிசி இடுவர். (வாய்க்கரிசி - பச்சை அரிசியும் தேங்காய்த் துருவலும் சேர்த்து) மனைவி, மக்கள் பிரேதத்தின் காலில் பூப்போட்டு வணங்குவர். கணவன் இறந்தால் மனைவி தாலியை கழற்றிப் பிரேதத்தின் நெஞ்சில் வைக்க வேண்டும். சுமங்கலி இறந்தால் நிறைநாளி (தீபம், நெல் நிறைந்த சேர்) யை பிரேதத்தின் கையால் தொடச் செய்து வீட்டின் உள்ளே வைக்க வேண்டும். தேங்காய், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம் என்பவற்றை சேலை முந்தானையில் முடிந்துவிடவும். பிரேதத்தின் கீழே உள்ள துணியையும் மேலே உள்ள துணியையும் சேர்த்து பிரேதத்தை மூடி தலைப்பகுதியில் ஒரு முடிச்சிடவும். கீழே உள்ள ஆர்க்கை துணியால் மூன்றிடத்தில் கட்டவும்.

யாகத்திற்குரிய மரங்களில் பச்சை மரத்தில் கட்டப்பட்ட பாடையில் பச்சைத் தென்னை ஓலைப் பன்னாங்கில் பிரேதத்தை வைக்கவும். பாடை கமுக மரத்தால் கட்டப்படும். பெண்கள் பாடையை இடமாக மூன்று முறை சுற்றி வந்தபின் பிரேதம் மயானத்திற்குக் கொண்டு செல்லப்படும். காற்பக்கம் முன்னாகப் பிரேதத்தை எடுத்துச் செல்ல வேண்டும். கர்த்தா கும்பத்துடன் முன்னே செல்ல புகையுடன் கூடிய நெருப்பை மூன்று காலுடைய உறியில் வைத்து, குனிந்த தலையுடன் சுற்றத்தவர் பின்னேவர வாத்தியம், சங்கு ஒலிக்கத் திருமுறைப்பாடல்கள் பாடியவாறு அஸ்திர மந்திரத்துடன் பொரி தூவியவாறு சுடலையை அடைந்து தலை தெற்கே இருக்குமாறு இறக்குக.

வடக்குத் தெற்காக விறகுகளை அடுக்கி அந்த சிதாஸ்தானத்தில் தலை தெற்கே இருக்கப் பிரேதத்தை வைத்துச் சுற்றத்தவர் வாய்க்கரிசி போடவும். சுமங்கலி இறந்தால் அவரின் கணவன் முந்தானையில் முடிந்த தேங்காய், வெற்றிலை, பாக்கு, பழம் என்பவற்றை எடுத்து வைத்து தேங்காயை உடைத்து தாலியை அவிழ்த்து (கழற்றி) எடுக்கவும். கர்த்தா சிவகும்பத்தை இடது தோளில் வைத்து இடப்புறமாகச் சுற்றி வந்து தலைப்பாகத்தில் வைத்து அதன் கழுத்துவரை உடைத்தெடுத்து கும்பநீரில் அரிசியை நனைத்துக் காசுடன் தற்புருஷமந்திரத்தால் வாய்க்கரிசி இடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடத்தையும் கொள்ளியையும் கொண்டு இடமாக மும்முறை சுற்றி வரவும். ஒவ்வொரு முறையும் குடத்தில் ஒவ்வொரு துவாரம் செய்து ஒழுகும் நீரை சிதையில் தெளிக்கவும். தலைமாட்டில் தெற்கு நோக்கி நின்று கொள்ளியைவைத்து குடத்தை முன்பக்கத்திற்கு போட்டு உடைக்கவும். பின் கால் மாட்டில் சென்று பவித்திரம் உபவீதம் என்பவற்றை கழற்றி சிதையில் போட்டு நமஸ்காரம் செய்து திருப்பிப் பாராமல் நீர்க்கரையை அடைந்து நீராடி நிவாபாஞ்சலி தருப்பணம் செய்து கொள்ளவும்.

நிவாபாஞ்சலி தருப்பணம் பிதிரர் பொருட்டு இரு கைகளாலும் செய்யப்படும். சல தருப்பணமாகும். இது பாஷான உத்தியா பனத்திலும் செய்யலாம். சுற்றத்தவரோடும் வீட்டு வாயிலுக்கு வந்து வேப்பிலை கடித்து உமிழ்ந்தபின் கைகால் கழுவிப் பின் நீராடி வீட்டைச் சுத்தம் செய்யவும். தூய்மையாய் தயாரித்த சோறு கறி முதலியவற்றை இறந்தவருக்குப் படைத்து தீபமேற்றத் திருமுறை பாடிய பின்னர் உரிமைக்காரருடன் உணவை உண்ணவும். ஆசௌசிகன் (ஞாதிகள்) அல்லாதோர் அங்கு உணவு உண்டால் அவ் ஆசௌசம் முடியும் வரையும் ஆசௌசம் காக்க வேண்டும். அந்தியேட்டி வரை தினமும் இரவில் தீபம் ஏற்றி நீர் நிரம்பிய பாத்திரம் ஒன்றையும் வைத்துத் திருமுறைப் பாராயணம் செய்தல் வேண்டும்.

## அஸ்தி சஞ்சயனம் (காடாத்து)

தகனம் செய்த அன்று அல்லது மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாட்களிலும் எலும்புகளை எடுக்கலாம். அங்கு அக்கினி தணிந்திருந்தால் சிவாக்கினி மூட்டிப் பிராயச்சித்தம் ஓமம், தத்துவ ஓமம் செய்யவும் அக்கினி தணியும் வரை நீரை ஊற்றவும். அபிஷேகப் பொருட்களால் காலில் இருந்து தலை வரை அபிஷேகம் செய்யவும். பின் சத்தியோசாதம் முதலாம் பஞ்சப்பிரம மந்திரங்களைக் கூறி முழந்தாள், தொப்புள், மார்பு, நெற்றி, தலை ஆகிய இடங்களில் திருநீறு பூசி, சந்தனம், பூ முதலியவற்றை சாத்தி தூபதீபம் காட்டிய பின் முழந்தாள் முதலிய ஐந்து இடங்களிலும் சத்தியோசாதம் முதலாம் மந்திரம் கூறி எலும்புகளை எடுத்து முக்காலியில் உள்ள பால் நிரம்பிய பாத்திரத்தில் ஒலி உண்டாகாதவாறு போட்டு பாத்திரத்தின் வாயைக் கோடித் துணியால் மூடிக்கட்டவும். மிகுதியாயுள்ள எலும்பு சாம்பலை அள்ளி, அவ்விடத்தைச் சுத்திசெய்து, பண்படுத்தி நவதானியம் விதைத்து, பால் தெளித்து, நிலத்தைக் குளிரப்பண்ணி வெற்றிலை, பாக்கு, பழம், நெற்பொரி, ரொட்டி, வடை (கோது நீக்காத உழுந்தில் செய்தது) முதவியவற்றை பூத பிரேத பைசாசங்களின் பொருட்டு நிவேதித்து திருமுறை ஓதி வழிபாடு செய்த பின்னர் எலும்பையும் சாம்புலையும் சமுத்திரம் முதலிய அன்னிய நீர் நிலைகளில் விடவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸ்தி சஞ்சயன் போது கொண்டு செல்பவை

அரிசிமாவை பிசைந்து 7 ரொட்டிகள் செய்து கொண்டு போக வேண்டும். அதோடு பால், தயிர், மண்முட்டி ஒன்று, வாளி, கத்தி, வாழையிலை, தீவத்தி, பழவகை, இளநீர், பாக்கு, வெற்றிலை பூஜைக்குரிய பொருட்கள்.

## தனிஷ்டா பஞ்சமி சாந்தி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி ஆகிய ந்து நட்சத்திரங்களில் இறந்தால் தோசமுண்டு. இதற்கு சாந்தி செய்ய வேண்டும்.

வீட்டில் பூர்ண கும்பம் தண்ணீர், பசு, தீபம் இவற்றை மூன்று நாள் இரண்டு நாள் அல்லது ஒரு நாளாவது வைக்கவேண்டும். நீற்றுப்பூசணிக்காய் கட்டுதல், வீட்டில் உள்ளவர்கள் கையில் நூல் கட்டுதல் மதலியன நடைமுறையில் உள்ள வழக்கம். பிரேதத்தைச் சுடலைக்கு எடுத்துச் செல்லும் போது கமுகம்பிள்ளை ஒன்றும் பிரேதத்தோடு கொண்டு செல்லும் வழக்கமும் உண்டு. சனிக்கிழமை பிரேதகனம் செய்யநேரிட்டால் பிரேதத்துடன் கமுகம்பிள்ளை எடுத்துச் செல்வர்.

## எட்டுச் செலவு

எட்டுசெ செலவு என்ற கிரியை பத்ததி, ஆகமாங்கள் ஆகியவற்றில் குறிப்பிடவில்லை. தேசவழமையில் உள்ள கிரியையாகும். இறந்த நாளில் இருந்து ஏழாம் நாளில் செய்யப்படும் தேவை  கருதி ஐந்தாம் நாளில் செய்வதம் உண்டு. இறந்தவர் விரும்பி உண்ட உணவு வகை யாவும் படைக்கும் பேருணவுப் படையல் தீபம் காட்டி அவ்வளவு வகைகளிலும் சிறு பகுதியை எடுத்து தீப்பந்தம் இளநீருடன் சந்தியில் வைக்கும் வழமை உண்டு. இது பகல்வேளையில் நடைபெறும். சில இடங்களில் இரவு வேளையில் நடத்துவர். இதில் மாமிச உணவு, முதுபானம் என்பன படைத்தல் தவறு. இறந்தவருடைய ஆன்மா சிவலோக யாத்திரை செய்யும்போது கடமை செய்தவரும் வீடும் புனிதமாக இருக்கவேண்டும் என்பதால் 31 நாடகளும் மாமிச உணவைத் தவிர்க்க  வேண்டும். எட்டுச்செலவு வரை வீட்டில் எண்ணெயில் பொரித்து உணவு வகை தயாரிப்பதில்லை.

## அந்தியேட்டி

அந்தியேட்டி என்பது இறுதியாகச் செய்யப்படும் யாகம் எனப்பொருள்படும். அந்தியேஷ்டியினால் சமய ஆசாரம், அனுட்டானத்தில் ஏற்பட்ட  குறைகள் நிவர்த்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசாரியார் நீராடிச் சந்தியாவந்தனம் முடித்து தெற்கு வாயிலால் மண்டபத்துட் புகுந்து சிவகும்ப வேதிகைக்குத் தெற்கே வடக்கு நோக்கி இருந்து கர்த்தாவிற்குத் திருநீறு கொடுத்து சங்கற்பம் செய்து கொண்டு சளீகரணம், பூதசுத்தி, மந்திர சுத்தி, அந்தர்யாகம், சிவகஸ்தம் செய்து சிவோகம் பாவனை முடித்து ஞானகட்கதாரணம் செய்தல் பஞ்சகௌவிய பூசை முடித்து யாகமண்டபத்தையும், கர்த்தாவையும் புத்தளிகையையும் பஞ்சகௌவியத்தால் ( புரொட்சித்தல்) தெளித்தல் வேண்டும். சூர்ணோற்சவம் செய்து சுண்ணப்பொடி சாத்திப் புத்தளிகைக்கு அபிடேகம் செய்ய வேண்டும். பதினெட்டு சமஸ்காரங்களையும் மனத்தினாலே செய்து நெற்பொரி முதலியவற்றை மண்டபத்தில் தூவி மிகுதியை ஈசானத்தில் பாசுபதாஸ்திர வர்த்தளி ஆசனத்தில் இடவும்.

## துடக்கு கழிவு

எமக்கு ஆசௌசம் முப்பது இரவுகள் முப்பதோரம் நாட்காலையில் தான் துடக்கு கழிவு நிகழவேண்டும். சைவ போசனமுடையவர்கள் வேறு மாமிசம் உண்பவருடன் கலப்பின்றி இருந்தால் பதினாறாம் நாளில் ஆசௌசம் நீங்கும்.

அந்தியயேட்டி செய்பவர்கள் வீட்டைவிட்டுப் புறப்பட்டுச் சென்ற பின்னர் வீட்டைக் கழுவிச்சுத்தம் செய்து அனைவரும் நீராடி பிராமணக் குருக்களைக் கொண்டு புண்ணியாகவாசனம் செய்த ஆசௌசம் நீக்கலாம். இதன் பின்னர் தான் பாஷாண (கல்லடி)ப் படையலுக்கு உணவு தயாரித்தல் வேண்டும். ஆசௌசம் நீங்கிய மறுநாளில் ஏனைய கிரியைகள் செய்யலாம்.

## வீட்டுக்கிரியை

வீட்டு முற்றத்தில் மெழுகி பூரணகும்பம் (நிறைகுடம்) வைத்து, தீபம் ஏற்றி பிள்ளையார் பிடித்து வைத்து, வாயிலில் மாவிலை கட்டவும். வீட்டுக்கிரியைகளில் முதலில் சங்கல்யம் செய்து விக்கினேஸ்வர பூஜை, தீபதேவி பூஜை, பஞ்சகௌவிய பூஜை, வருண கும்ப பூஜை என்பன நிறைவேறிய பின் கர்த்தாவிற்கு பஞ்சகௌவியம் பருகக் கொடுக்கப்படும்.

## அனுஞ்சை

ஒரு வாழை இலையில் மூன்று தர்ப்பை, பவித்திரம், எள்ளு, தாம்பூலம், உபவீதம் காசு என்பவற்றை கர்த்தா தலையில் வைத்து இடப்புறமாக மூன்று முறை சுற்றி இன்ன வருடம், அயனம், ருது மாதம், பட்சம் நட்சத்திரம், திதி, வாரம் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபதினத்திலே இன்னாருக்கு சிரார்த்தம் செய்கின்றேன். அதற்கு அதிகாரம் கொடுக்க வேண்டும். என்று குருவினிடம் வேண்ட அவர் அதிகாரம் தந்தோம். என்று கட்டைத் தர்ப்பையைக் கர்த்தாவிடம் கொடுக்க அதை கர்த்தா இடுப்பில் செருகிக் கொள்வார். பின்னர் வலதுகை மோதிர விரலில் பவித்திரத்தையும் வலத்தோளில் உபவீதத்தையும் அணிந்து கொள்ளவும்.

## சூரிய பூசை

சிவப்பு நிறப்பூவும் நீரும் கொண்டு மூன்று முறை ஆத்ம பிரதட்சணம் செய்து சூரியமூர்த்தியை வணங்கிச் செய்யப் போகும் சிரார்த்தத்திற்குச் சாட்சியாக இருந்து அருள வேண்டுமெனப் பிரார்த்தித்து முற்றத்தில் வைக்கப்பட்ட கும்பத்தில் பூவையும் நீரையும் போட்டு வழிபடவும்.

தந்தைக்கு அல்லது தாய்க்கு இடபதானம், ஏகோத்திட்டம் பஞ்சதச (பதினைந்து) மாசியம், சோதகும்ப சிரார்த்தம் சபிண்டீகரணம் என்பன செய்யப்போகிறேன் என்று சங்கற்பம் பண்ணிக்கொள்ளவும்.

## இடபதானம்

இறந்தவருடைய தான தருமங்களின் பலனை தருமத்தின் வடிவாயுள்ள இடபத்தின் மூலமாக சிவபெருமானிடம் சேர்க்கும் பொருட்டு இடபதானம் செய்யப்படும் இடபம்(ஆண்மாடு) தானம் செய்ய வசதிப்படாத இடத்து தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி அதில் இடபத்தின் வடிவை எழுதி அதன்மேல் தேங்காய் வைத்த கர்த்தா அத்தாம்பாளத்தை நாலு திசையிலும் இழுத்து உரிய மந்திரங்களைக் கூறித் தட்சணையுடன் இதை ஓர் அந்தணருக்குத் தானமாகக் கொடுக்கவும்.

## ஏகோத்திட்டம்

இது இறந்தவர் ஒருவரை மட்டும் குறித்துச் செல்லப்படும் தானமாகும். அந்தணர் ஒருவரை அழைத்து மேற்கு முகமாக ஆசனத்தில் இருத்தி அவருக்கு ஸ்நானத்திற்கு வேண்டிய நல்லெண்ணெய், அரப்பு, எலுமிச்சைப்பழம் கொடுத்து நீராடியதாகப் பாவனை செய்து வேட்டி, சால்வை, சந்தனம், பூ என்பவற்றைச் சாத்தி அரிசி, மரக்கறி என்பவற்றைக் கொடுத்துப் பூசிக்கவும்.

தரையைச் சுத்தம் செய்த வாழையிலை போட்ட, ஒரு தருப்பைத் தெற்கே நுனி இருக்கும் வண்ணம் வைத்து ஒரு பிண்டம் இடவும், பச்சை அரிசிமா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழுந்துமா, எள், பால், தயிர், நெய்,தேன், வாழைப்பழம், ஆகிய எட்டு பொருட்கள் சேர்த்து உருட்டிப் பிண்டம் செய்யப்படும். கர்த்தா தெற்கு முகமாக இடது முழுந்தாளையும் இடது கையையும் ஊன்றியிருந்து கைமாறிப் பிண்டம் இடவும். சந்தனம், பூ, சாத்தி, வெற்றிலை, பாக்கு, பழம், இளநீர் நைவேத்தியம் நிவேதித்து தர்ப்பணம் செய்து நமஸ்காரம் செய்து கொண்டு தமது சக்திக்கு ஏற்றவாறு தானம் கொடுக்கவும். இத்தானத்தினால் ஆன்மா உலக வாழ்வில் ஓரளவு திருப்தியடையும் இதில் இருபத்தி நாலு தானங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவையாவன: பவித்திரம், பூணூல், கமண்டலம், உருத்திராக்கம், பாதுகை (மிதியடி) தண்டம், கௌபீனம், விபூதிப்பை, யோகபட்டம், குடை, குல்லாய், மேல்வஸ்திரம் (சால்வை), வஸ்திரம், பொன் மோதிரம், இரத்தினம், நெய், வெண்ணெய், பசு, பூமி, போசனத்திற்கு வேண்டிய பொருட்கள், சர்வதானியங்கள், சர்வ அலங்காரப் பொருட்கள், தாசீ தாசர்கள் என்பனவாம். ஏகோத்திட்டம் ஏற்ற குருவிற்கு தானம், தட்சணைகளைக் கொடுத்து வழி அனுப்பி மஞ்சள்நீர் தெளித்து இடத்தைச் சுத்தம் செய்து கர்த்தா கைகால் கழுவி அல்லது நீராடி வந்து பஞ்சகௌவியம் பருகிக்கொள்ளவும்.

## மாசியம்

இறந்த வருடத்தில் மாதந்தோறும் செய்யப்படும் சிரார்த்தமே மாசியமாகும். இது மாதந்தோறும் இறந்த திதியில் செய்யப்படும் முதல் மாதத்திற்குரிய மாசிகம் ஏகோதிட்டம் என்ற பெயரில் முதலில் செய்யப்பட்டது. இரண்டாம் மாதம் தொடக்கம் பதினொரு மாத மாசிகமும் ஊனமாசிகம், ஊனதிரிபட்டச மாசிகம், ஊனசாண் மாசிகமும், ஊன ஆப்திக மாசிகமும் ஆகப் பதினைந்து மாசிகம் செய்தல் வேண்டும்.

பதினைந்து மாசிகங்களும் செய்ததன் மேல் வருடமுடிவில் தான் சபிண்டீகரணம் செய்தல் வேண்டும். ஆயினும் கரத்தாவின் அசௌகரியங்களை உத்தேசித்து ஆசௌச முடிவில் பதினைந்து மாசிகங்களையும் செய்து முடிப்பர். இப்படிச் செய்தாலும் பின்னரும் உரிய காலத்தில் மாசிகங்களைச் செய்வது சிறந்ததாகும்.

## சோதகும்ப சிராத்தம்

இது நீர் நிரப்பிய பாத்திர (உதகம் நீர்) தானமாகும். இறந்த ஆன்மாவின் தாகம் தீரும் பொருட்டு இறந்த நாள் முதல் வருடம் முன்நூற்றி அறுபத்தைந்து நாளிலும் இத்தானம் செய்யவேண்டும். இவ்வாறு வசதி ஏற்படாததால் இப்போது சபிண்டீகரணத்தின் முன் சோதகும்பதானம் நடைபெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சபிண்டீகரணம்

வீட்டுக்கிரியையைப் பொதுவாகச் சபிண்டீகரணம் என்று சொல்லும் வழக்கு இப்போது உண்டு. ஏகோத்திட்டம், பதினைந்து மாசிகம், சோதகும்ப சிரார்த்தம் என்பவற்றைச் செய்த பின்பே சபிண்டிகரணம் செய்யவேண்டும். இது ஒருவருட முடிவில் செய்யதக்கது. எனினும் இடையில் ஏற்படும் வசிதியீனங்களைக் கருதி ஆசௌசம் நீங்கிய மறுதினத்தில் செய்யலாம். இதிலே நாலு பகுதிகளுண்டு.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிவனடியார் பொருட்டு (இருவர்) (விசுவதேவர்) | - | நந்திதேவர், மகாகாளர் |
| 2. | பிதிர்தேவர் பொருட்டு மூவர் | - | கந்தர், சண்டர், காணதீசர் |
| 3. | அதிதி அப்பியாகதர் இருவர் | - | முன் அறியப்படாதவர் அப்போது அங்கு வந்தவர் |
| 4. | நிமித்தர் | - | இறந்தவர் பொருட்டு ஒருவர் |

-இவ்வாறு எண்மர் அமர்த்தப்படுவர், எண்மர் கிடைக்காத போது ஒவ்வொரு ஒருவர் பகுதிக்கு ஒருவராக நால்வரையேனும், விசுவதேவருக்கு ஒருவர் பிதிர்தேவருக்கு ஒருவராக இருவரையேனும் அமர்த்தலாம். ஒருவரே அமையும் போது புயங்களில் விசுவதேவரையும், தோளுச்சியில் பிதிர்தேவர்களையும் பூசிக்கலாம்.

இவர்களைச் சகல உபசாரங்களும் செய்து வீட்டினுள் அழைத்து வந்து தர்ப்பை ஆசனத்தில் விசுவதேவர் அதிதி அப்பியாகதரைக் கிழக்கு முகமாகவும் பிதிர் தேவர்களை வடக்கு முகமாகவும், நிமித்தரை மேற்கு முகமாகவும் அமர்த்துக. அவர்கள் முன் பாத்திரங்களை வைத்து தேவ பாத்திரத்தில் நெல்லும் பிதிர் பாத்திரத்தில் எள்ளும் இட்டு பூசிக்கவும், பூணூலை வலமாக இட்டு விசுவதேவரையும் இடமாக இட்டுப் பிதிர்தேவரையும் பூசிக்க வேண்டும். நிமித்தரையும் பின் அதிதி அப்பியாகதரையும் பூசித்து வஸ்திரம், அரிசி, காய்கறி தானம், தட்சணை கொடுக்கவும். அவர்கள் முன்னிலையில் சாணத்தால் மெழுகி வாழையிலையில் தெற்கு நுனியாகத் தர்ப்பைகளை வைத்து எள்ளுச் சிதறிக்கர்த்தா, தெற்கு நோக்கிய இடது முழந்தாள் இடதுகையை ஊன்றியிருந்து வடக்கிலிருந்து தெற்காக முதல் வரிசையில் பிதிர்வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும் இரண்டாவது வரிசையில் மாதுரு வர்க்கத்திற்கு மூன்று பிண்டமும் கிழக்கில் மூன்றாவது வரிசையில் நடுவில் இறந்தவர் (நிமித்தர்) குறித்து ஒரு பிண்டமும் இடுக. நிமித்த பிண்டம் சற்று நீண்டதாய் துனி வளைந்து மற்றப் பிண்டங்களைத் தீண்டுவதாய் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிண்டத்திற்கு மஞ்சள், சந்தனம், பூவும் சாத்தவும். இறந்தவர் ஆணாகில் வேட்டியும், பெண் ஆகில் சேலையும் பிண்டத்திற்குச் சாத்துக. பிண்டத்திற்கு மேற்கே அன்னம், கறிவகை, தயிர், பாயாசம், பலகாரம், பழவகை, வெற்றிலை, பாக்கு என்பவற்றைப் படைக்கவும். இளநீரை வெட்டித் திறந்து வைக்கவும். பின்னர் தூபதீபம் காட்டி வழிபாடு செய்யவும். கர்த்தாவும் உறவினரும் பூவும் நீரும் இட்டு வழிபட்ட பின் திருமுறைபாடி சரமகவி பாடித் தர்ப்பணம் செய்யவும். நிமித்த பிண்டத்தில் சாத்திய பூவை எடுத்துப் பிதிர்ப்பிண்டத்தில் சேர்க்கவும். இதனால் இறந்தவர் பிதிர்களுடன் சேர்ந்தார் எனக்கொள்ளப்படும். பின்னர் சகல பிதிர் தேவர்களையும் உத்வாசனம் செய்து பிண்டங்களை பசுவிற்குக் கொடுக்கவும் அல்லது சமுத்திரத்தில் விடவும்.

வடக்குத் தொற்காக மூன்று பாத்திரமும் கிழக்கில் ஒரு பாத்திரமும் வைத்து அவற்றுள் அர்க்கியம் (நீர், சந்தனம், பால், எள்ளு, தர்ப்பை நுனி, பூ) இட்டு மூன்று பாத்திரத்துள்ளும் பிதிர்த் தேவரையும் தனிப்பாத்திரத்தில் நிமித்தரையும் பூசித்து நிமித்தருக்குரிய பாத்திரத்தில் உள்ள அர்க்கிய சலத்தை பிதிர்தேவருக்குரிய மூன்று பாத்திரத்தில் உள்ள சலத்துடன் சேர்க்கும் நிகழ்வு அர்க்கிய சம்யோசனம் எனப்படும்.

பின்னர் குருவிற்கு தட்சணை கொடுத்து, ஆசீர்வாதம் பெற்ற பின் கர்த்தாவிற்கு மஞ்சளால் திலகமிட்டு அதன்மேல் அட்சதையை வைத்து விடுவார். குருவை வீட்டு வாசல் வரை சென்று வழியனுப்பி உறவினர் நண்பருடன் உணவு உண்ணவும்.

## ஆப்திகம் (ஆட்டைத்திவசம்)

ஓர் ஆண்டு முடிவிலே செய்யப்படும் சிரார்த்தமாதலால் இது ஆட்டைத்திவசம் எனப்படும். இறந்த திதியில் செய்யும் இந்த்ர சிரார்த்தத்துடன் இறந்தவரைக் குறித்துச் செய்யும் அபரக்கிரியைகள் நிறைவுறும்.

## வருட சிரார்த்தம்

சிரார்த்தமென்பது சிரத்தையுடன் செய்யப்படுவது எனப்பொருள் கொள்ளப்படும். வருடந்தோறும் இறந்த திதியில் தந்தை தாயாரைக் குறித்துச் செய்யப்படுவது சிரார்த்தமாகும். மகன் தந்தைக்குச் செய்யும் சிரார்த்தத்தில் தந்தை, பேரன், பூட்டன் ஆகிய மூவருக்கு மூன்று பிண்டமும் இடல் வேண்டும். தாயாருக்கு சிரார்த்தம் செய்யும் போது தாய், தகப்பனின் தாய், பேரனுடைய தாய் ஆகிய மூவருக்கு மூன்று பிண்டமும் தமது வம்சத்தவருக்கு ஒரு பிண்டமும் இடல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரார்த்தம் அன்ன சிரார்த்தம், ஆமசிரார்த்தம், இரணிய சிரார்த்தம், தருப்பண ரூப சிரார்த்தம் என நாலு வகைப்படும்.

## அன்ன சிரார்த்தம்

தம்மரபிலோ அன்றி தம்மில் உயர்ந்த மரபிலோ உள்ள தீட்சை பெற்றவர் அழைத்த நிமித்த தானத்திலிருத்தி குறித்த தானத்திற்கு உரியவராகப் பூசித்து அமுது படைத்து, உண்பித்துச் செய்யும் சிரார்த்தமாகும். இதில் அன்னம், எள், பானீயம், தயிர், பால், தேன், நெய், வாழைப்பழம் ஆகிய பொருட்கள் சேர்த்துப் பிண்டமிடல் வேண்டும்.

## ஆம சிரார்த்தம்

உணவிற்குப் பதிலாக அரிசி, காய்கறி வகைகளைப் படைத்துச் செய்யும் சிரார்த்தமாகும். இதில் அரிசிமா, உழுந்து மா, எள், பால், தயிர், நெய், தேன், வாழைப்பழம் ஆகிய பொருட்கள் சேர்த்து உருட்டிப் பிண்டமிடல் வேண்டும். இவ்வெட்டுப் பொருட்களும் அட்டாங்கமெனப்படும்.

## இரணிய சிரார்த்தம்

அன்ன சிரார்த்தம், ஆமசிரார்த்தம் செய்ய வசதியில்லாத போதும் தகுதியானவர் கிடைக்காத போதும் பணத்தை வைத்துச் செய்யப்படும் இரணிய சிரார்த்தமாகும்.

## தருப்பணரூபா சிரார்த்தம்

இது அமாவாசையில் செய்யப்படுவதாகும்.

## ஆசௌசகாலத்தில் சிரார்தம்வரின்

சனன, மரண ஆசௌசத்தில் சிரார்த்த தினம் வந்தால் ஆசௌசம் நீங்கும் நாளில் சிரார்த்தம் செய்தல் வேண்டும். விதவை தான் வீட்டுக்கு விலக்காய் இருக்கும் போது தன் கணவனுடைய சிரார்த்தம் வந்தால் ஐந்தாம் நாள் சிரார்த்தம் செயக்கடவள், சிரார்த்தத்திற்குப் பாகம் பண்ணத் தொடங்கிய பின் ஆசௌசம் வந்தால் அது கர்த்தாவைப் பற்றாது.

## சிரார்த்தத்திற்கு ஆகுந் திரவியங்கள்

நெல்லரிசி, கோதுமை, யவம், சிறுபயறு, உழுந்து, எள்ளு, சக்கரை, வெல்லம், தேன், நல்லெண்ணை, பசுப்பால், பசுத்தயிர், சிகைக்காய், மிளகு, சீரகம், மஞ்சள், கடுகு, உப்பு, புளி, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், பலாப்பழம், தேங்காய், இளநீர், பாகற்காய், முள்ளிக்காய், கெக்கரிக்காய், புடலங்காய், அவரைக்காய், நெல்லிக்காய், எலுமிச்சம்பழம், சிறுகிழங்கு, பெருவள்ளிக்கிழங்கு, இஞ்சிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரைபிலை, பிரண்டை, சேப்பந்தண்டு, சேப்பங்கீரை, சேப்பங்கிழங்கு, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, ஏலம், சுக்கு, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி.

## சிராத்தத்திற்கு ஆகாத திரவியங்கள்

கடலை, துவரை, வெண்கடுகு, பெரும்பயற்றங்காய், பீர்க்கங்காய், அத்திக்காய், முருங்கைக்காய், பூசணிக்காய், கத்தரிக்காய், சுரைக்காய், வாழைப்பூ, முள்ளங்கி, வெங்காயம், வெள்ளைப்பூடு, எருமைப்பால், எருமைத்தயிர், எருமைநெய், ஆட்டுப்பால், ஆட்டுத்தயிர், ஆட்டுநெய்.

## மாளயம்

மாளயம் என்பது பிதிர் கருமமாகும். இது மாஹாளம் என்றும் பெயர் பெறும். இது ஒரு பொது சிராத்த (திவசம்) மாகும்.

புரட்டாதி மாத அபரபக்கப் பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள காலம் மாளயபட்சமாகும். பிதிர்பளைத் திருப்பதிப்படுத்தவும் அவர்கள் நற்கதி அடையவும் பிரர்க்பருமங்களிற் பிரதிக்கருமங்கள் செய்ய வேண்டும். இல்லறத்தானுக்கு ஒருவர் உரிய கருமங்களிற் பிதிர்கடனும் ஒன்று. ஐவேள்விகளில் பிதிர்யக்ஞமும் (பிதிர் வேள்வி) ஒன்று.

ஒருவர் இறந்த தினத்தில் அவருக்குச் சிராத்தம் (திவசம்) செய்தல் வேண்டும். இறந்த தினம் தெரியாவிட்டால் அந்த மாதத்தில் அமாவாசையன்று செய்தல் வேண்டும். அல்லது மாளயபட்சத்திற்கு செய்து கொள்ளலாம். தெரிந்தோ, தெரியாமலோ சிராத்தத்தைச் செய்யாது விட்டவர்கள் மாளயபட்சத்தில் பிதிர்க்கருமம் செய்தல் வேண்டும்.

இப்பட்சத்தில் வரும் பரணி, அட்டமி கஜச்சாயை எனப்படும். கஜச்சாயை எனப்படுவது புரட்டாதி மாதத்தில் எந்த வாரத்திலாவது மகநட்சத்திரமும் திரயோதசித் திதியும் கூடி வருவது. இது ஒரு புண்ணிய காலமாகும். இக்காலத்திற்கு செய்யும் கருமத்திற்கும் பலன் அதிகம். இக்காலத்தில் விரதமிருந்து பிதிர்தர்ப்பணம், தான, தருமம், சாதுக்கள், அடியவர், ஏழைகள் ஆகியோருக்கு அமுதளித்தல் போன்றன செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண வீட்டில் அபரக் கிரியைகளைச் செய்வதற்கு வேண்டிய பொருட்களின் விபரம்

| | |
|---|---|
| நெல் | குருக்கள் வேட்டி, சால்வை |
| பச்சை அரிசி | கும்ப வேட்டி - 1 |
| பயறு | முட்டி - 2 |
| உழுந்து | சட்டி - 2 |
| எள்ளு | செம்பு - 13 |
| தேங்காய் | குடம் - 1 |
| தேங்காய் எண்ணெய் | குத்து விளக்கு |
| விபூதி | உரல், உலக்கை |
| சந்தனம் | அறுகம்புல் |
| குங்குமம் | மாவிலை, வாழையிலை |
| அபிஷேகக்கூட்டு | கோசலம், கோமயம் |
| மஞ்சள் மா | பால், இளநீர் |
| அரிசி மா | மான்தோல் |
| அபிஷேகத் திரவியம் | தட்டம் |
| பன்னீர் | வேட்டி, சால்வை (கிரியை செய்வோருக்கு) |
| நெய் | வாழைப்பழம் |
| தேன் | எலுமிச்சம் பழம் |
| நல்லெண்ணெய் | பழவகைகள் |
| அரப்பு | பாக்கு |
| லவரந்தர் | ஊதுபத்தி |
| வெற்றிலை | (இறந்தவருக்கு) வேட்டி, சால்வை |
| சாம்பிராணி | அல்லது சேலை, சட்டை |
| தசாங்கம் | நெற்பொரி |
| நவதானியம் | கத்தி |
| கழிநூல் பந்து | கோரளம், கயிறு |
| பஞ்சவர்ண நூல் | தீப்பெட்டி |
| விளைவு குடம் | சமித்துக்கட்டு |
| பட்டுத் துண்டு | 6m வெள்ளைத்துணி (கோடி) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டிக் கிரியைக்குத் தேவைப்படும் பொருட்கள்

நெல்
பச்சை அரிசி
பயறு
உழுந்து
எள்ளு
தேங்காய் - 20
கழிநூல் பந்து
பஞ்சவர்ண நூல்
விபூதி
குங்குமம்
சந்தனம்
பன்னீர்
அபிஷேகக்கூட்டு
அபிஷேகத் திரவியம்
நவதானியம்
நெற்பொரி
நெய்
சமித்துக்கட்டு
ஊதுபத்தி
விளைவுசூடம்
சாம்பிராணி
அரிசிமா
மஞ்சள் மா
நல்லெண்ணெய்
அரப்பு
குருக்கள் வேட்டி சால்வை
கும்ப வேட்டி
வேட்டி
பட்டுத்துண்டு (சிவப்பு, பச்சை)
பச்சை மா ( புல்லாந்தி இலையை) உலர்த்தி இடித்து எடுப்பது
வெற்றிலை
பாக்கு
வாழைப்பழம்
எலுமிச்சம் பழம்
பழவகைகள்
அறுகம்புல்
பால், தயிர்
கோசலம், கோமயம்
இளநீர்
வாழையிலை
மாவிலை
முட்டி - 2
சட்டி - 1
உரல், உலக்கை
தேங்காய் எண்ணெய்
சில்லறைப் பணம்
செம்பு - 12
குடம் - 1
குத்துவிளக்கு
தட்டம்
மான்தோல்
பூ, மாலைகள், சரப்பந்து
அமுது
பலகார வகைகள்
1 படி பச்சை அரிசி பொங்கல்
3 படி அரிசியில் சோறு
கறிவகை
சிவப்பு மா (செங்கல் தூள்)
கரிமா (கரியில் இடித்து எடுப்பது)
2 தானத்திற்கு அரிசி மரக்கறி
செங்கல் - 1
வைக்கோல் 1 கட்டு
கத்தி
தீப்பெட்டி
தென்னோலைத் தோரணம்
கயிறு
1m வெள்ளைத் துணி (கொடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசௌச விளக்கம்

"சுகி" என்றால் சுத்தம், சௌசம் சுத்தம் உடையது. ஆசுசி, அழுக்கு, ஆசௌசம் (கிரியாபரமான) சுத்தம் இன்மை, ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டுக் கிரியைகளைச் செய்கிறவனுக்கு, அவைகளைச் செய்ய அதிகாரம் இல்லாமற் செய்யும் ஓர் அசுத்தி ஆசௌசம் எனப்படும். தீட்டு, தொடக்கு என்ற சொற்களும் மக்கள் பேச்சில் வரும், தொடக்கை நீக்கிய பின்னரே நற்காரியங்கள் செய்யலாம்.

அசுத்தியை (ஆழுக்கை)ப் போக்க 1. காலம், 2. ஸ்நானம், 3. இரண்டும் ஆக மூன்று வழிகள் இருக்கின்றன.

ஆதலால் ஒரு குறித்த கால எல்லை வைத்து அதன் முடிவில் நீராடி, ஆசௌசத்தை நீக்கலாம். இங்கு காலம், ஸ்நானம் ஆகிய இரண்டும் வேண்டியதாகிறது.

1. பிறப்பு
2. இறப்பு
3. சுடுதல்
4. பிரேதத்துக்குப் பின்னே செல்லல்
5. காவுதல்
6. அழுதல்
7. ஆசௌசிகளிடம் சாப்பிடுதல்
8. கலத்தல்
9. குறித்த கால எல்லையில் தலை மயிரை அகற்றாமை
10. இறந்தவருடைய உரிமைக்காரர் (மகன் அல்லது கொள்ளி வைத்தவர்)

இறந்தவரது பிரேதத்தன்மையை நீக்கி விடும் கிரியை ஆகிய சபண்டீகரணம்செய்யாமை. (மயிர் முழுவதையும் களைதல் ஆசௌச நீக்கத்தின் பொருட்டு இன்றும் பல கிராமங்களில் வழக்கம்)

## பிறப்பு

ஒரு வீட்டில் குழந்தை பிறத்தல் தொடர்பாக உண்டாகம் தொடக்கு நான்கு வகையானது:

1. கருப்பச்சிதைவு நான்கு மாதத்திற்குள் நிகழ்தல்
2. 5ஆம் 6ஆம் மாதங்களில் நிகழ்தல்
3. 7 ஆம் 8ஆம் 9ஆம் மாதங்களில் நிகழ்தல்
4. பத்தாம் மாதத் தொடக்கத்தில் நிகழும் இயற்கையான பிறப்பு.

முதலிரு நிகழ்ச்சிகளும் எத்தனை மாதத்துள் வெளிப்பட்டதோ அத்தனை நாட்கள் தொடக்கு. உதாரணம் 6ஆம் மாதத்தில் கருச்சிதைந்தால் 6 நாள் அதாடக்கு. அதன் பிறகு நிகழ்ந்தால் இயற்கையான குழந்தை பிறக்கும் போது தொடக்குக்காக்கும் நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவு, பிள்ளைப் பேற்றில் பெண் பிறந்தால் 40 நாளும், ஆண் பிறந்தால் 30 நாளும் பிதாமாதா இருவருக்கும் தொடக்கு. முதல் ஆறு மாதத்துள் சிசு அழிதலில் தந்தை முழுகத் தொடக்குப் போகும். தொடக்குக் காக்கும் உறவினர் (ஞாதிகர்) 5ஆம் மாத நிகழ்விலிருந்து முழுகி ஆசௌசத்தைப் போக்கலாம். பூரணகருச் சிதைவிலும், பிள்ளை பிறந்தவுடன் இறந்தாலும், தந்தை 10 நாள் தொடக்குக் காக்க வேண்டும். 10 நாட்களுள் குழந்தை இறந்தால் மரணத் தொடக்கக் கொள்ளத் தேவையில்லை. இயற்கையான பிறப்பில் 30 நாள் தொடக்கு காப்பது வழக்கம். (தாய்க்கு 40 நாள் என்ற முறையில் குழந்தையைக் கோவிலுக்கு 40 ஆம் நாள் கொண்டு போகும் வழக்கம் இருந்து வருகிறது)

சைவக்குரு (ஆசாரிய அபிஷேகம் பெற்றவர்) ஆசௌச நிகழ்வில் உடன் சுத்தியாகிறார். தீட்சை பெற்ற சைவமதத்தவருள் நியமங்களின் வழுவாது சந்தியாவனந்தம் செய்வோர் 25 நாளும் ஒழுங்காகக் கோயில் தொண்டு செய்வோர் 20 நாளும் தொடக்குக்காக்க வேண்டும். பிரமசாரிக்குத் தொடக்கில்லை என்பது குருகுலத்தில் வசித்து ஞான நூல்களைக் கற்று காலம் கழிப்பவர்க்கே பொருந்தும். உறவினருடன் வசிக்கும் பிரமசாரி அர்ச்சகர் இவ்விதியில் அடைக்கலம் புகமுடியாது. மூன்றாம் தீட்சையாகிய நிர்வாயதீட்சை பெற்றுச் சிவபூசை தவறாது செய்கிறவருக்கு மூன்று நாள் தொடக்கு கோவில்களில் ஓதுவார்களாகப் பணிபுரிவோர் 15 நாளும், ஆடல், பாடல் வாத்திய வழிபாடு செய்வோர் 14 நாளும் காக்க வேண்டும்.

## இறப்பு

மரண ஆசௌசமே பிரதானமாகப் பேணப்படுவது நம் நாட்டு வழக்கம். ஆதனால் இப்பகுதி விரிவாக எழுதப்படுகிறது. குழந்தை பிறந்து பெயர் இடுவதற்கு முன் ஒரு மாதத்தினுள் இறந்தால் உடன் சுத்தியாம், பல்முளைக்குமுன் (6 மாதத்துள்) ஆயின், ஒரு நாள் தொடக்கு. 11ஆம் ஆண்டுக்குப் பின் முழுத்தொடக்கு. பெண்மகவு விவாகம் செய்யும் முன் இறந்தால் பெற்றோருக்கு 3 நாள் தொடக்கு. விவாகம் நிச்சயித்த பெண் மணவிழாவுக்கு முன் இறந்தால் கணவனும் அவன் உறவினரும் 3 நாள் தொடக்குக் காப்பர். பிற ஆத்மாசாந்திக் கிரியைகளும் கணவன் வீட்டாரே செய்ய வேண்டும். ஒரு மாதத்தின் பின் இறக்கும் சிசுவைச் சுடலாம், அன்றி புதைக்கலாம். 11 வயதுக்குப் பின் சுடுவதே நல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் மரணித்தால் ஆண்வழியில் ஏழு தலைமுறை வரை தொடக்குக் காக்க வேண்டும். குருசீட தொடர்புபற்றி 3 நாள் காக்க தாய் வழி பாட்டான் பாட்டி, மாமன், மாமி, மருமகள், மகள் வயிற்றுப்பேரன் ஆகியோருக்கு 3 அல்லது 6 நாள் தொடக்கு.

தானம், வேள்வி, விவாகம் போன்ற நற்கருமங்களுக்கு இடையிலும், போர் உள் நாட்டுக் குழப்பம் மலைச்சரிவு, மரம், விழுதல், பூகம்பம் போன்ற பெரும் ஆபத்துக்களின் மத்தியிலும் வரும் தொடக்கு உடனே நீங்கும். ஒரு வரம் கேட்டு அனுஷ்டிக்கும் உபவாச விரதத்தின் இடையில் தொடக்கு ஏற்பட்டால் தானம், அர்ச்சனை இரண்டையும் நீக்கி விரதத்தை அனுட்டிக்கலாம். விவாகம் செய்யம் மாப்பிள்ளை, கன்னியைத்தானம் செய்பவர், கோவில் திருவிழாவோ பிரதிஷ்டையோ செய்யும் ஆசாரியர் செய்விப்பவர் (எஜமானர்) துணைப்பணிகள் செய்வோர் ஆகியவர்களுக்கு உடன் சுத்தியாம், சிரார்த்தம், யாத்திரை ஆகிய புண்ணிய கருமங்களைச் செய்யும் போது தொடக்குணடானால் உடன் சுத்தியாம்.

## பூப்பு

பெண்கள் முதற்பூப்பு, மாதவிலக்குக் காலத்தில் மூன்று நாள் தொடக்குக் கொள். 18 நாட்களுள் மீண்டும் அடையாளம் கண்டால் ஒரு நாள் தொடக்கு. 19 நாளில் ஆயின் 2 நாளும், 20 நாள் ஆயின் 3 நாளும் கொள்க. ஆன்மீக வாழ்வில் நம்பிக்கையுள்ளோர் 3 நாளும் முழுகுதல் செய்யார். இக்காலத்தில் அகப்பூசை வழிபாடு செய்யலாம். அவர்களை அறிந்தோ அறியாமலோ தொடுவோர் முழுகி, உரிய மந்திரஜபம் செய்து சுத்திபெறுகின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கத் தமிழ் மூன்றுந் தா

உலகம் பஞ்சபூதங்களால் ஆனது. உலகுக்கும் உயிருக்கும் தொடர்பு ஏற்படுத்தும் உடலும் பஞ்சபூதங்களால் ஆனது. உயிர் உடலின்றி உலகுடன் தொடர்பு கொள்ள வகையற்றது

இறைவன் உயிர்கள் உய்யும் பொருட்டு தனு, கரணம், புவன போகங்கள் அருளியுள்ளான். தனு என்பது உயிரைத் தாங்கும் கரணம் என்பது உடல். உலகுடன் தொடர்பை ஏற்படுத்த காரணமாக உள்ள பொறிகள். புவனம் என்பது இந்த உலகம். போகம் என்பது உலகில் பெறும் இன்பதுன்ப அனுபவம்.

நாம் உடலிலுள்ள ஐம்பொறிகளால் உலகுடன் தொடர்பு கொள்கிறோம். பொறிகள் என்பது எந்திரங்கள் எனவும் கொள்ளலாம். மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவை மனிதன் உலகுடன் தொடர்பு கொள்ள இறைவன் அருளிய பொறிகள். மெய் என்ற பொறியினூடாக நாம் சூடு, குளிர் போன்றவற்றையும், வாய் என்ற பொறியினூடாக நாம் சுவையையும், கண்ணினூடாக ஒளியுடன் தொடர்புபட்டு பார்வையையும், மூக்கினூடாக வாசத்தையும் செவிகளினூடாக ஓசைகளையும் உணர்கிறோம்.

இவற்றுள் ஏதாவது பழுது பட்டால் அந்தப் பொறியினுடைய அனுபவத்தை நாம் இழந்து விடுகிறோம். கண் என்ற பொறி பழுதானால் ஒளியையும் அதனூடாக வரும் காட்சிகளையும் இழந்து விடுகிறோம்.

பொறிகளுடனாகக் கிடைக்கும் அனுபவங்களை நாம் புலன்கள் என்கிறோம். ஐந்து பொறிகளுடாக ஐந்து விதமான உணர்வுகளைப் பெறுவதால் இவ் ஐம்புலன்கள் எனப்படுகின்றன. அவையாவன சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என ஐந்துமாம்.

ஐம் பொறிகளைப் புறக்கரணங்கள் என்பர். ஏனெனில் அவை நாம் காணக்கூடியதாக புறத்தே உள்ளன. ஐம் பொறிகளுடாகப் பெறப்படும் ஐந்து புலன்கள் என்ற அனுபவங்களை உடல் தான் பெறுகின்றதேயொழிய உயிர் நேரடியாகப் பெற முடிவதில்லை. எனவே இந்த அனுபவங்களையும் உயிர்களையும் இணைப்பதற்கு உடலில் உள்ள சில பெறிகள் இயங்குகின்றன. இவை கண்ணால் காண வல்லனவல்ல. சூக்குமமானவை இவற்றை அந்தக்கரணங்கள் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கரணங்கள் நான்கு என்பர் அறிஞர்கள். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவையே அவை. உடல் வெறும் அனுபவங்களை அந்தக் கரணங்களுடாகத்தான் உயிர் பெறுகின்றது.

அந்தக் கரணங்களில் முதன்மையானது மனம். இது பால் போன்றது. தெளிவானது. பொறிகளுடாக வரும் அனுபவங்களைத் தொகுக்கத் தொடங்கியதும் மனம் இயங்க ஆரம்பிக்கிறது. மன இயக்கத்தின் பயனாக எமக்கு புத்தி வருகிறது. புத்தி வளர வளர மனம் இயக்கத்தின் ஆற்றலும் பெருகுகின்றது. இவை இரண்டின் தொடர்பில் நாம் சில முடிவுகளை எடுக்ககூடியவாராக மாற்றம் பெறுகின்றோம். இது சித்தம் எனப்படும். மன இயக்கத்தின் பயனாக புத்தியும், புத்தியின் பயனாகத் தீர்மானம் பெறும் சக்தியான சித்தமும் கிடைக்கும் போது எம்மிடம் தோன்றும் பெருமிதமே அகங்காரம் எனப்படுகிறது. இந்த நான்கும் தான் எமது நல்வினை தீவினைகளை உருவாக்கும். பணிகளைச் செய்கின்றன. குழந்தைகளுக்குப் பொறிகள் இருக்கின்றன. ஆனால் அனுபவங்கள் குறைவு என்பதால் அந்தக் காரணங்கள் சிறப்பிடம் பெறுவதில்லை. எனவே தான் குழந்தையின் செயல்கள் பாவ புண்ணியங்களாகத் தீர்மானிக்கப்படுவதில்லை என்பர் சைவ அறிஞர்.

தீக்குச்சியைக் கொண்டு விளக்கும் ஏற்றலாம், வீட்டையும் எரிக்கலாம் என்பது போல் ஐம்பொறிகளுடாகக் கிடைக்கும் ஐம்புலன்களையும் அதனூடாக அமையும் இந்தக் காரணங்களையும் உயிர் வளர்ச்சிக்குப் பயன்படுத்துபவர்களும் இருக்கின்றார்கள். அவற்றால் உயிரின் துன்பத்துக்கு வழிகோலுபவர்களும் இருக்கிறார்கள். மனதை அடக்கி சித்தி பெறுபவர்கள் சித்தர்கள் ஆகின்றனர். மனத்தின் வழி செல்பவர்கள்உலகில் பித்தர்களாகியுள்ளனர்.

சித்தர்களும் ஞானிகளும் நல்வினை தீவினை அற்றவர்கள். உலக நிகழ்வுகளில் பற்றற்றவர்கள். இது அந்தரக்கரணங்களான மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவை செயலற்றுப் போகும் நிலை.

ஔவையார் இந்நிலையை வேண்டி இறைவனைத் துதிக்கின்றார். பால் போல் இருக்கின்ற மனத்தையும் சற்று இறுகிய தேனைப் போலமைந்த புத்தியையும் பால், தேன் வேறு கலவைகள் கொண்டு மேலும் இறுக்க நிலையில் காணப்படும் பாகு போன்ற சித்தத்தையும் கடினமான தானியமான பருப்பு போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகங்காரத்தையும் உன்னிடம் தந்து விடுகிறேன். அவற்றை நீயே வைத்துக் கொண்டு உண்மை, அறிவு, மகிழ்வு எனப்படும் சத்து, சித்து, ஆனந்தம் மூன்று பொருள்களையும் தா அப்பனே என வேண்டுகிறார். பால், தேன், பாகு, பருப்பு என்பன உணவுப் பொருள்களாகவும் வெளிப்படையாக நமக்கும் தோன்றினாலும் போகப் பொருளுக்கான அந்தக் கரணங்கள் நான்கினையும் கொடுத்துத் தமிழ் போன்ற இளமை நிலையில் இனிமை தரும் பொருள்களான சத் சித் ஆனந்தம் என்ற மூன்றையும் இரந்து கேட்கின்றார்.

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா.

என்ற இந்தப் பாடல் உள்ளுந்தோறும் சைவக கருத்துக்களை உருக்குகின்ற சுரபி என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

கேணேஸ்வரன் சிந்தனையிலிருந்து....
தொ. பே. இல. 026-2221869





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

எங்கள் அன்புத் தெய்வத்தின்

பிரிவுச்செய்தி அறிந்து

உடனிருந்து உதவிய நெஞ்சங்களுக்கும்,

ஆறுதல் கூறிய இதயங்களுக்கும்,

மரணச்சடங்கில் கலந்துகொண்ட அன்பர்களுக்கும்

அந்தியேட்டிக் கிரியைகளில் பங்குகொண்டு

அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்த

உயர்ந்த உள்ளங்களுக்கும் எங்கள்


மனமார்ந்த நன்றிகள்.



குடும்பத்தினர்
104, இராஜவரோதயம் வீதி,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org